பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

காலி கோரி கிஸ்ஸா

(கருத்தவள் சிவத்தவள் இருவரின் தர்க்க வரலாறு)

இஃது

அய்யம் பேட்டை

S. அப்துல் ரஸாக் ஸாஹிப் அவர்களால்

உர்துவிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்

அச்சிடப்பட்டது.

முதல் பதிப்பு.

1952

(Copy-Right Reserved.)

[அணா 4.

Q7
N52
183813

காலி கோரி கிஸ்ஸா.

கருத்தவள், சிவத்தவள் இருவரின் தர்க்க வரலாறு.

எல்லாப் புகழும், வல்ல இறைவன் ஒருவனுக்கே உரித்தாகும். ஸலவாத்தும் ஸலாமும் நம்இருலோக ரக்ஷகரான முஹம்மத் நபிகள் (ஸல்) அவர்கள் பேரிலும் அவர்களது ஸஹாபாக்கள் ஏனைய குடும்பத்தினர்கள் மீதும் உண்டாகுக!.

நிற்க, இப்பூவுலகின் கண், சிருஷ்டிக்கர்த்தாவாகிய ஆண்டவன், சிருஷ்டித்த பொருள்கள் யாவும் மானிட வர்க்கத்திற்கு அத்தியாவசியமானவை என்பது வெள்ளிடைமலை.

அவனது சிருஷ்டிப் பொருள்களில் பெரும்பான்மையானவைகள் மானிடவர்க்கத்தில் ஜோடி ஜோடியாக இருப்பதற் கேற்ப ஏனைய வர்க்கத்திலும் ஜோடி ஜோடியாகவே இருப்பதைக் காண்கிறோம். ஆணுக்கெதிரில் பெண்ணைப் படைத்திருப்பதைப் போலவே, கறுப்புக்கு நிகரில் வெள்ளையை உண்டாக்கி யிருக்கிறான். காரமான பதார்த்தத்தை சாப்பிட்டு சலித்துப் போகிறோமாகில் தித்திப்பான பதார்த்தத்தை உட்கொள்ளவே, மனம் மகிழ்ச்சியும் திருப்தியு மடைகிறது.

சுருங்கச் சொல்லில் அவன் எதை எந்த அமைப்பிலும் நிறத்திலும் படைத்திருக்கிறானோ அதில் நாம் அற்ப சொற்ப குறையேனும், கூறமுற்படுவோமாகில் அது நம்முடைய அறியாமை மதியீனத்தையுமே வெளிப்படுத்துவதாகும். அடியிற் கண்ட கிஸ்ஸா அதற்குச் சான்றாகும். இந்த வரலாறு இரு ஸ்திரீகளைப் பற்றியதாகும். ஆதலால் இதை ஆடவர்கள் பொதுவாயும் ஸ்திரீகள் குறிப்பாகவும் செவிசாய்த்து கேட்பது அத்தியாவசியமாகும்.

இதை விவரிப்பவர் எப்படி விவரிக்கிறார் என்றால் :—

ஒரு நாள் இரண்டு மாதுகளுக்கிடை தர்க்க சம்பாஷணை நடை பெற்றது. அதில் ஒருத்தி கறுப்பாயும், இன்னொருத்தி சிவப்பாயு மிருந்தாள். இருவருக்கும் இளம்பிராயம் வாய்த்திருந்

திருந்தது. இந்த இருவரும் எப்படியோ ஒரு நாள் சாவகாசமாய் உட்கார்ந்து கொண்டு சம்பாஷிக்கும் படியான சமயம் வாய்த்தது.

ஹிந்துஸ்தானி பாஷையில் "கோரி" சிவத்தவளுக்கும் "காலி" கருத்தவளுக்கும் வழங்கப்படும் பெயர்கள்.

தனக்கு எல்லோரும் 'கோரி' என்று அழைக்கிறார்களே என்ற செருக்குப் படைத்த அவள் தன் சம்பாஷணைக்கிடை 'காலி'யைப் பார்த்து "என்ன அம்மா! நீ இவ்வளவு கன்னங்கரே லென்று இரும்பைப் போல் இருக்கிறாயே; உன் நிறம் ஏன் இவ்வளவு கருத்து விட்டது. ஐயோ பாவம்! உனக்கு வெட்கமில்லாயா?

"என்னைப் பார்! எவ்வளவு சிகப்பா யிருக்கிறேன்; சிவப்புக் கல்லவோ அதிக கௌரவம். நீ ஹஸ்ரத் யூசுப் (அலை) அவர்களைப் பற்றி கேட்டதில்லையா? சுலைகா சிமாட்டி, அவரது சிவந்த மேனியைக் கண்டல்லவோ மயங்கி மோகங் கொண்டார். என் கணவரும் என்னிடத்தில் வந்தால் அவருக்கேற்படும் பிரியம், இவ்வளவு அவ்வளவு வென்று நான் சொல்ல முடியாது. இன்னமும் தேச சரித்திரத்தை கண்ணுற்றுப் பார்த்த போதிலும் "பத்ரே முனீர்" அழகு வாயப் பெற்றிராவிடில் 'பேநஸீர்' இளவரசர் எதற்காக அவளை இச்சித்திருக்க வேண்டும்?

"சந்திரனைப் பார்! அதிலுள்ள ஒளியின் பிரகாசித்திற்காக ஆவற் கொண்டல்லவோ மக்கள் நிலா வீசும் காலங்களில் உல்லாசத் திற்காக புறப்பட்டுச் செல்லுகிறார்கள்.

"நான் உல்லாசத்திற்கு புறப்பட்டுச் செல்வேனாகில் என்னைப் பார்க்கவும் அநேகர் துடித்துக் கொண்டிருப்பர்.

"நான் என் கைகளில் மருதோன்றித்தழை அரைத்துப் பூசிக் கொள்வேனாகில் ஆஹா! நான் எப்படி மினுக்குவேன் தெரியுமா? அழகு வாய்ந்த சுவர்க்கக் கன்னிகைகளும் என்னைக் கண்டு ரோஷமடைய வேண்டுமே!

"இனி உன் நிறத்தின் கேவலத்தைப் பற்றி கேட்கிறாயா? நன்றாய் செவி சாய்த்துக் கேள். கருப்பு என்பது இருட்டு நிறங் கொண்டது. இருட்டைக் கண்டதும் ஜனங்கள் பயப்படுகிறார்கள். இருட்டில் எந்த வேலையாவது செய்ய முடிகிறதா? இல்லை.

அப்படிப் பட்ட இருட்டிலும் நான் போய் உட்காருவேனாகில் என் வெளிச்சம் நிலா வெளிச்சத்தைப் போல் தோன்றுமே!

"அட்டா! சுவர்க்கக் கன்னிகை அல்லவோ இது. இங்கே எப்படியோ வந்து விட்டது. என்று என்னைப் பார்ப்பவர்கள் சொல்லும் படியாக இருக்கும்.

"சிவப்பு ரவிக்கை அணிந்துதலையை சீவிக் கொண்டு வெளியிற் புறப்படுவேனாகில் நாலாபக்கங்களி லிருந்து என் மீது எவ்வளவு பார்வைகள் சூழ்ந்து நிற்கும் என்று சொல்ல முடியாது.

"கருத்தவளையோ கண்ணெடுத்து பார்ப்போர் ஒருவருமில்லை. அவளை யார் தான் சட்டை செய்யப் போகிறார்கள்? உன் கணவர் எப்படித் தான் உன்னை மணந்து கொண்டாரோ என்பது எனக்குத் தெரியவில்லை.

"உன் நிறம் உனக்கு ஒருக்கால் நல்லதாகத் தான் தெரியலாம். ஆனாலோ உன்னை கண் கொடுத்துப் பார்ப்பவர்கள் சிரிக்காம லிருக்க மாட்டார்கள்.

"அல்லா, தன் சிருஷ்டிகளுக்குள் சுவர்க்க கன்னிகைகளை படைத்திருக்கிறான் என்பதை நீயும் கேட்டிருப்பாய். அழகில் அவர்களை வெல்ல முடியுமா?

"அவர்களுக்கிடை கருப்பு உண்டென்று நீ நிரூபிப்பாயா? உலக வாசிகளும் அழகை ஒப்பிட்டு பேசும் சமயங்களில் அவர்களையே திருஷ்டாந்தமாக எடுத்துச் சொல்லுகிறார்கள்.

"இன்னும்கேள். நான்எந்த ஆடவரையாவது கண்ணெடுத்துப் பார்க்கையில் அவரும் என்னை உற்றுப் பார்த்து விடுவாராகில் அவருக்கு வந்தது பித்து! என்னையே மேன் மேலும் அவதானிக்க நேரிட்டு விடும்.

"என்னுடைய உதடுகளின் அழகைப் பார். மாணிக்கத்தைப் போல், ஜொலிக்கின்றது. எல்லோரும் அதைக் கண்டு மயங்குகிறார்கள்.

"தாம்பூலம் அருந்துவதோ! நான். அவ்வழகைக்கண்டு துடிப்போர்பலர்! என் மூக்கைப்பார். ஆஹா! மல்லிகை அரும்பையும் இதற்கு ஒப்பிட முடியுமோ? நான் வாயைத்திறந்து பேசுகிறேனாகில்

சூரியனும் சந்திரனும் அதைக்கண்டு பலியாய் விடுகின்றன! என் தலை உரோமங்களை சீவிக்கொள்கிறேனாகில் எண்ணிறந்தோர் அதைக் கண்டு சுயசித்தை இழந்து விடுகிறார்கள்.

"எனது மார்புகளின் விபரீதத்தைக்கேள்! எல்லோரும் அவற்றை ஜோதி வில்வனை எனச் சொல்லுகிறார்கள்.

"என் இடுப்புகைப்பிடியில் அடங்கக்கூடியது; காற்றும் அதை வீழ்த்திவிடும். அவ்வளவு நாஜுக்கானது. உன்னையோ எங்கேனும் விலைக்குவாங்கி வளர்த்திருக்கவேண்டும். உன்தோற்றம் என் உள்ளத்திற்கு அச்சத்தைத் தருகிறது. அந்தோ! உன்தோற்றத்தால் ஆந்தையும் வெட்கமடையாமல் போகாது.

"கருமை என்பதுஉன்னிலேயேமுடியுற்றதுபோலாயிருக்கிறது. உன் நிறத்தைக் கண்டு நீ வெட்கமடையவில்லையா? இம்மாதிரியான தோற்றமுள்ள நீ மறைந்திராது வெளியிலும் வந்து விடுகிறாயே! விடிந்து எழுந்தால் அல்லாஹ் உன்முகத்தை காட்டக்கூடாது.

"உலகில் எண்ணிறந்த ஸ்திரீகள் இருந்துவந்தபோதிலும் உன்னைப்போலொத்தவர்கள் இருப்பார்களோ என்ற சந்தேகம், பார்ப்போர் பிரமித்துப் போகக்கூடிய அளவிற்கல்லவோ இருந்து வருகிறது உன் நிறம்.

"என்நிறம் எனக்கு கௌரவத்தை அளித்து வருகையில், உன் நிறம் உனக்கு இழிவை தருகிறதென்பதைமறக்காதே. இன்னும் சொல்லுகிறேன் கேள். கலியாணம் முதலிய சுபகாரியச்சபைகளில் நான் கலந்து கொள்வேனாகில் என்னால் அச்சபைக்கு ஏற்படும்படியான லக்ஷணத்தை என்னென்று கூறுவேன்.

"நான் நகை அணிந்துகொள்ளாமற் போனபோதிலும் என்னுடைய அழகே எனக்கு ஆயிரம் நகைகளுக்கு மேலான அழகை தரத்தக்கதாகும். ஆண்டவன் என் நிறத்துக்கு இவ்வளவு மகிமையும், உன் நிறத்துக்கு அவ்வளவு கேவலத்தையும் கொடுத்துள்ளான். இதனால் ஆண்டவன் கிருபை என்மீதும் அவனது சாபம் உன் மீதும் உண்டென்பது நன்கு விளங்குகிறது. பட்டு ஜருகை, ஆடைகளை நீ நிறையவும் அணிந்துகொண்டு வீற்றிருந்தால்தான் என்ன? அது உனக்கு லக்ஷணப்படாது. அப்போதும் கருப்பு கருப்புத்தான். எவ்வளவு உயர்ந்த ஆபரணங்கள் போட்டால்தான்

என்ன? எவ்வளவு சிறந்த துணிமணிகளை நீ அணிந்துகொண்டால்தான் என்ன? உன்னை யார்தான் மதிக்கப்போகிறார்கள். நீ ஜீவித்திருப்பதைக்காட்டிலும் இறந்துப்போவதே மேலாகும். உன்மீது யார்தான் இரக்கப்படுவர். நீயே உன் கணவனுக்கு அடங்கிப் போகவேண்டுமேயல்லாது தப்பித்தவறி ஏதேனும் குற்றம் குறைவு செய்துவிட்டாலோ உனக்கு செருப்படியேவிழும்.

"வீட்டில் உள்ள அற்பசொற்ப வேலையாட்கள் நிறம் கருப்பாயிருப்பது சகஜம். உன்னைக்கண்டும் நான் அப்படியே நினைக்கும்படியாகிறது.

"புறாக்கூட்டத்தினிடை காகம் பறந்துவந்து உட்கார்ந்தால் அது புறா ஆகுமா?

"பிளேட் நிறைய சாப்பாட்டில் ஒரு பருக்கை கருப்பாகத் தெரிந்தால் அது ஈயோ என்று பயந்து சாப்பிடுவோர் அதைப் பொறுக்கி அப்புறப்படுத்தி விடுகிறார்கள்.

"சட்டிப்பானைக்கரி வஸ்திரத்தின்மேல் பட்டால் எவ்வளவு அருவெறுப்பாகத் தெரிகிறது. அதை கழுவி விட்டப்பிறகே மனதுக்கு நிம்மதி ஏற்படுகிறது. கருப்புபிடிக்கவில்லை என்பதே அதன் தாத்பரியமல்லவா? கருத்தவளை கைகயணியப்பார்ப்போர் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? இந்த மூகரக்கட்டைக்கு கல்யாணம் கூடவா கேட்கிறது? என்னென்ன விதமாய் அலங்கரித்துக்கொண்டால்தானென்ன? கருத்தவளை லக்ஷியம் செய்வோர் இல்லை.

183813

"வெள்ளை, மஞ்சள், சிவப்பு எல்லா நிறங்களுக்கிடையும், உன்னுடைய நிறமே யாவற்றிலும் கேவலமானது. கோரியோ பார்வையின் கவர்ச்சியை அடைகிறாள்.

"காலியைக் கண்டவுடன் ஜனங்கள் பல்லில் விரலைவைத்துக் கடித்து ஆச்சரியப்படுகிறார்கள். அவள் முகத்தின்மேல் ஆண்டவன் சாபக்குறி காணப்படுவதாயும் உலகிலேயே அவள் முகத்தோற்றம் இப்படியாகி விட்டபோது கியாமத் என்னும் இறுதிநாளில் அவள் நிலைமை எப்படியாயிருக்குமென்றும் கூசாமல் சொல்லுகிறார்கள்" என்று இப்படியெல்லாம் தன் அழகில் அபார செருக்குப் படைத்த கோரி என்னும் சிவத்தவள், தன்னுடைய கர்வத்தின் வேக ஆத்திரம் அடங்கும்வரையில் சரமாரியாக வார்த்தைகளை

பேசலானுள். தன் வேகம் அடங்கும்வரையில் அவள் தன்வாயை மூடவில்லை. இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த 'காலி' மௌனஞ் சாதித்து வந்ததைத் தவிர, வேறொன்றையும் எதிர்த்துப் பேச அவளால் முடியவில்லை. பேசவேண்டியதெல்லாம் பேசிவிட்டு 'கோரி' வாய் மூடவும், 'காலிக்கு' சமாளிக்க முடியாத ஆத்திரமும் வேகமும் நெஞ்சடைக்கச் செய்தன. அவளோ விவேகி; எனினும் எதிரியின் அறியாமைக்கும் அவள்பேசிய முரட்டு தனமான வார்த்தைகளுக்கும் அவளும் முரட்டுத்தனமாகவே பதிலளிக்க நேரிட்டது.

இனி அவள் எத்தகைய குத்திரவிடைகளை பகர முன்வருகிருள் என்பதை கவனிக்க, அதுவும் ஓர்படிப்பினையாகவே இருந்து வருவதாகும்.

கருத்தவளாகிய காலியின் குத்திரவிடை.

"அடிமூடத்தனம் படைத்தவளே! கர்வங்கொண்டவளே! இவ்வளவுதானு? அல்லது இன்னும் பேசவேண்டியிருக்கிறதா? "ஓடுகிறவனைக்கண்டால் விரட்டுபவனுக்கு இலகு என்பார்கள்" அதுபோலவே இருக்கிறது உன் நிலைமை. நான் உன்னேடு கொஞ்ச நேரம் நல்லபடியாக பேசுவோம் என்று உட்கார்ந்தேன். நீயோ என்நிறத்திற்காக என்னை இழிவின் பாதாளத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிட்டாய் என் மனதை சல்லிசல்லியாக்கி விட்டாய்.

"அடியே நீயார்? எனக்கு இப்படியெல்லாம் பேசுவதற்கு. மாமியார் சக்களத்திகூட இவ்வாறு பெரும்படியாக பேசமாட்டார்களே! என்மனம் புண்பட்டது. என் நிரேகமே ஒருவாறு பொசுங்கி விட்டது. அடியே! நீ எங்கிருந்துவந்து இவ்வாறெல்லாம் பேச வேண்டுமென்று நினைத்திருந்தாய்? உன்மேல் இடிவிழாதா? உனக்கு எந்தப் பெரியோர்களும் புத்திமதி புகட்டவில்லையா? நீசக்கூட்டத்துக்கு, தலைவியோ நீ? வெட்கமும் மானமும் விற்றுவிட்டாயோ?

"அடிமூடி! உன்னுடைய நிறம் சிவப்பாயிருக்கிறது என்பதற்காகவா இவ்வளவு நீண்ட பிரசங்கம் செய்தாய்? உன்னிறத்தின் செருக்கு இறுதியில் உன்னை நரகத்தில் கொண்டுபோய் சேர்த்து விடுமென்பதை நீ கிஞ்சித்தேனும் சிந்தித்தாயா? அடியே! வெள்ளை

நிறத்திற்காக பேய், பிசாசு எங்கே என்று காத்துக் கொண்டிருக்கும். கருப்பிற்கருகில் அது நெருங்கவும் பயப்படும். பேய் பூதங்களின் வலையில் சூழ்ந்து அவள் இறக்கவும் நேரிடுமே. அதை கவனித்துப் பார்த்தாயா? என்னிறமோ கருத்த இரும்பைப் போலவிருப்பதாக சொல்லிவிட்டாயல்லவா!. இரும்பின் பெருமதி என்னவென்பதை அறிவாயா?

"அடியே! ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் இருந்து வந்த புனித பட்டாக் கத்தியின் பேரைக் கேட்டாயா? அதுவே ஜுல் பகார் எனப்படுவது; அது இரும்பினுல் செய்யப்பட்டது. தங்கமென்ன! வெள்ளி என்ன! எல்லாம் இரும்பு உலோகத்துடன் சேர்ந்ததாகவே வெளியாகிறது. இரும்பு உலோகமே போர்வீரர்களின் கம்பீரம் வாய்ந்த ஆயுதங்களாக அமையப் பெறுகின்றன.

"தட்டான்கள், மஹா விலேஉயர்ந்த ஆபரணங்களே தயாரிக்கிறார்கள். ஆனுல் அவைகளே தயாரித்துக் கொடுக்கும் ஆயுதசகாயம் அவர்களுக்கு அந்த இரும்பல்லவோ தந்தருள்கிறது. மனிதர்கள் பசிக்கு சாப்பிடுகிறார்கள். சாப்பாடன்றி அவர்கள் ஜீவித்திருக்க முடியாது. அத்தகைய சாப்பாட்டின் தானியங்களே உற்பத்தி செய்வதற்கான கருவிகள் இரும்பில்லாமல் செய்துவிட முடியுமா?

"அபாண்ட யுத்தங்களில் இரும்பில்லாமல் எந்த ஆயுதத்தை செய்து வேலே நடத்தமுடியும்? 'கைபர்' கோட்டையை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எந்த உலோகத்தினுல் செய்யப்பட்ட ஆயுதங்களேக் கொண்டு வெற்றியடைந்தார்கள். நீர், யாத்திரைக்குரிய கப்பல்களேயும் படகுகளேயும் கவனித்துப்பார். அதில் பெரும்பாலான பாகத்தின் இணைப்புக்கு எம்மட்டில் இரும்பு உபயோகப் படுத்தப் பட்டிருக்கின்றது. இரும்பு அரசர்களிடம் இருக்கும் படியான பாதுகாவலன்.

"உன் சிவப்புநிறம், சதா ஒரேநிலேயில் இருக்குமென்று நம்பிவிட்டாயோ? வெகுசீக்கிரத்தில் வயதிற்கேற்றவாறு அது மங்கிப் போய்தான் தீரும். கடைசியில் மீதிபாக இருக்கப்போவது கருப்பு நிறமே.

"உன்நிறம் சிவப்பாக இருப்பதால் நீ அழகுவாய்ந்தவளென்று பெருமைக் கொள்ளாதே. கருமை நிறத்தில் ஏற்படும்படியான

லக்ஷணமும் மேனியும் வெள்ளை நிறத்திலில்லை. முகவசிகரத்திற்குரியது கருப்பு நிறமே. கருப்பைக்கொண்டே உலககாரியங்கள் பூராவும் பூர்த்தி அடைகின்றன. கருத்தவள் சிவப்புதாமணி அணிந்தபிறகு அவளைப்பார்! எவ்வளவு அழகாய் தோற்றப்படுகிருள். வெள்ளை முகத்திற்கு ஆசைப்படுகிறவர் சிலரேயாவர்! லக்ஷணத்தில் அதாவது அலங்கரிப்புக்கு ஏற்றவள் கருத்தவளே.

"ஓ முட்டாளே! நீ அழகியபூரண சந்திரனையும், உற்றுப்பார். அதினுள்ளும் கருப்புத் தோற்றம் ஒன்று உனக்குத் தெரியாமல் போகாது. வானசாஸ்திரங்களிலெல்லாம்முதன்மைவாய்ந்தது 'திருக்குர்ஆன்' அதிலுள்ள எழுத்துக்களை கவனித்துப்பார். அவையும் கருப்பானவை. மனிதனின் பிரதான அவயவம் நேத்திரம். அதில் கருப்பு சுர்மாவையோ அல்லது மையையோ இட்டுப்பார். அப்போது அது எப்படி இருக்கிறதென்று கவனி. இறந்த மையத்துகளுக்கும் அந்த சுர்மாவைப்பூசி அழகு படுத்துகிருர்கள்.

"மதி கெட்டவளே! பரமண்டலத்திலும் லவ்ஹேகலம் என்று வழங்கப்படும்படியான புனித பலகையின் நிறமும் கருப்பல்லவோ? குண்டுமணி அழகிற் சிறந்ததுதான். ஆனுல் அதிலுள்ள கருப்புப் பொட்டு நீக்கிப்பார். அப்போது அதன் அழகு குறைவுபடும். உலகதோற்றத்தைக் காண்பிக்கும் நேத்திரங்களில்கூட, கரும்விழியே பிரதானமானது என்று மனதில் இறுத்திக்கொள். உலகில் கணவன் இழந்தவளது கழுத்தின் கருமணி நீக்கப்பட்டுப் போனுல் அவள் விதவையாகிவிடுகிருள். அவளது மதிப்பும் குறைந்துவிடுகிறது. ஆனுல் அந்தக் கருமணிகளினுல் அவளுக்கு ஏற்பட்டிருந்த செல்வாக்கை தெரிந்துகொள்.

மணமகளுக்கு தலையைசீவி சிங்காரித்து வைக்கிருர்கள். என்னென்ன புஷ்பங்களைக் கொண்டோ அழகலங்காரஞ் செய்து வைக்கிருர்கள். சிவ நிறமுள்ள மணமகள்கள் இருந்தால்தான் என்ன? அவர்களின் சிரசுகளின் மேலுள்ள கருப்பு ரோமங்களை அப்புறப்படுத்திவிட்டால் பிறகு அவர்களில் லக்ஷணம் எங்கே இருக்கப் போகிறது! யௌவனப் பருவத்தின் லக்ஷணம் கருப்பிலேயே அமைந்திருக்கிறது. அதாவது பாலில் சர்க்கரை கறைத்துவிட்டால் பால் தித்திக்குமல்லவா? அதைப்போலவே வெள்ளையில் கருப்புச் சேர்ந்து அதன் லக்ஷணத்தை அதிகரிக்கச் செய்கிறது.

"சிவத்தவள் முகத்தின்மேல் எங்கேனும் கருப்புமச்சமிருந்து விட்டால் அவளை அதிர்ஷ்டசாலி என்கிறார்கள். நேத்திரத்திலுள்ள கருவிழி அல்லாவுடைய விசேஷஅருள் என்பதை மறக்கமுடியுமா? நீ தாயின் வயிற்றுக்குள் இருந்தாயே அப்போது உன்னை அதற்குள் சூழ்ந்துகொண்டிருந்தது இருளா? வெளிச்சமா?

"கருப்பை வெறுக்கும் நீஇதே சமயத்தில் அந்த கறுப்புரோமங்களை யெல்லாம் என்மொட்டை அடித்துத் துலைத்துவிடக் கூடாது? புருவம், கண்ணிமை இவைகளிலுள்ள ரோமங்களையும் சிரைத்து விட்டு அப்பால் கண்ணாடி எடுத்துப் பார் உன் லக்ஷணத்தை!

"ஏ மதிகெட்டவளே! நீ முன் பின் யோசியாமல் ஒரே விதமாக அளவுக்கு மீறி பேசிவிட்டாய். உனக்குத் தான் பேசும் சாதுர்யம் உண்டென்று நீ வைராக்கியம் கொண்டு விட்டாய். நீ எனக்குத் தெரிந்தவள். ஆனால் இன்றுதான் உன்னை நெருங்கிப் பழகிக்கொள்ள எனக்கு முதன் முதலாக சந்தர்ப்பம் வாய்த்தது. இச்சந்தர்ப்பத்தில் நான் பெரும் பாடுபட்டேன். நீ பேசின முரட்டுதனமான பேச்சுகளைப்போல் வேறு யாராவது பேசியிருந்தால் இதுவரை அவர்களுக்கு ஓர் உதை உதைத்திருப்பேன்.

"சிருஷ்டிக்கர்த்தன் ஒவ்வொரு பொருளிலும் ஏதோ ஒரு அற்ப சொற்ப பின்னத்தை இயற்கையாகவே பொருத்தியுள்ளான். அவனது உள்ளமை யொன்றே பின்ன மற்றது.

"இவ்வளவு விளக்கமாயும் விரிவாயும் உன்னுடைய முரட்டுத்தனமான வார்த்தைகளுக்கு நான் பதிலளித்து விட்டேன். இனி நீ எனக்கு என்ன முகாந்தரம் கூறப்போகிறாய்? என்பதை சொல்"

பிறகு, இருவரும காஜி சாஹிபு அவர்களிடம் சென்று பத்வா கேட்கவே அவர், மையைப் பேனாவில் தொட்டு எழுத ஆரம்பித்தார்.

"கோரி" க்கு அந்த கருப்பு மையினின்றும் அதே சமயம் ஓர் உணர்ச்சியும், படிப்பினையும் அடைந்துள்ளன.

"கருப்பு நிறமும் அல்லாஹ்வுக்கு பொருந்தத் தக்கதே" என்று அந்த பத்வாவில் கண்டிருந்தது.

"கோரி" அதைக் கேட்டு தன் அறியாமைக்கு வருந்தி கண்ணீர் சொரிந்த படியே வீட்டிற்குச் சென்றாள்.

மறுபடி அங்கிருந்து திரும்ப வந்து கோரி, "சகோதரியே! நான் உன்னுடைய நல்லுபதேசங்களுக்கு முன் தலை சாய்க்கிறேன். நான் ஏதோ முட்டாள்தனமாக கருப்பை கேவலமாய் நினைத்துப் பேசிவிட்டேன். அதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும். என் பிழை பாவத்தை மன்னிக்குமாறு நான் இறைவன் சந்நிதானத்தில் மன்றாடி துஆக் கேட்கிறேன். நீயும் என்னை மன்னித்ததற்கு அறிகுறியாக என் சிரசின்மீது உன் கையை வைத்தெடு" என்றாள். உடனே "காலி" என்பவளும் அவள் தலைமேல் கைவைத்து முதுகைத் தட்டிக் கொடுத்து, "சகோதரியே! நான் உன்னை மன்னித்து விட்டேன். ஆனால், நீயும் இனி ஒருவரை அவரது கருநிறத்திற்காகவோ, அல்லது வேறெவ்வித அற்ப சொற்ப தவறுதலுக்காகவோ, இவ்வாறு கேவலமாக பேசிவிடாதே" என்று உபதேசித்தாள்.

கோரி, காலி ஒற்றுமை

நல்லவர் சேர்க்கை வீண் போகாது என்பதற்கேற்ப, கோரிக்கு நல்லுணர்ச்சி ஏற்பட்டு ஆண்டவன் பயபக்தியுடன் காலத்தைக் கழித்து வந்தாள். 'காலி' என்பவளும் தன் மனதிலுள்ள அவளது வருத்தத்தையும் அறவே ஒழித்து அவளோடு உண்மை சகோதரியைப்போல் பழகி வரலானாள்.

எனவே இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளும், 'காலி' என்பவளின் திருஷ்டாந்தங்களை ஊன்றி கவனித்து தாங்களும் அவ்வாறே பிறரை பொறுத்தருளும் சாத்வீக துறையில் ஒழுகி தம்மையும் நினைத்து தமக்காக நன்மைக்குரிய துஆச் செய்ய வேண்டுமென இச்சரிதையைக் கோர்வை செய்த ஆசிரியர் வேண்டிக் கொள்ளுகிறார்.

காலி கோரி கிஸ்ஸா

முற்றுப் பெற்றது.

Printed at Shahul Hameedia Press, Madras.

எங்களது புஸ்தகங்களுள் சில:—

அன்வாருல் குர்ஆன் 1-வது (தமிழ் அல்ஹம்து ஜுஸ்உ அர்த்தத்துடன்)	0-12-0
அன்வாருல் குர்ஆன் 2-வது (தமிழ் யாஸீன் ஸூரு அர்த்தத்துடன்)	0-8-0
அன்வாருல் குர்ஆன் 3-வது (தமிழ் தபாரக் ஸூரு அர்த்தத்துடன்)	0-4-0
டி. மூன்று புஸ்தகங்கள் சேர்ந்தது கலிகோ பைண்டு	1-8-0
தமிழ் யாஸீன் தல்கீன் சேர்ந்தது	0-7-0
தீனுல்இஸ்லாம் ஷாபி அறபும் தமிழும் சேர்ந்தது	0-6-0
நஸீஹத்து இஸ்லாம் ஷாபி	0-12-0
அஹ்காமுல் முஸ்லிமீன் ஷாபி	1-0-0
டை அறபுத் தமிழ் கலிகோ பைண்டு	1-8-0
நபிநாயகத்தின் திருவாக்கியம்	2-4-0
முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்	3-0-0
தரீகுல் ஜன்னா	3-0-0
மிப்தாஹுஸ் ஸலாஹ் பீ யீலாஹின் ஸிகாஹ்	3-0-0
யூனானி வைத்திய முறைகள்	3-0-0
கஸஸுல் அன்பியா பெரியது	9-8-0
முஹம்மது ஹனீபா யுத்த சரித்திரம்	3-0-0
நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம்	8-0-0
மஜ்மூஉஸ் ஸலவாத் (தமிழ் கஞ்சுல் அர்ஷ்)	0-15-0
மஜ்மூஉ மௌலூது (தமிழ் மௌலூதுகள்)	0-15-0
கைத்தொழில் சம்பாதனை வழிகள்	3-0-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ்-5.